# 7

# அஸ்ஸீரா வத்தாரீஃ

## 7.1 நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மக்கா வாழ்வு

அகிலத்துக்கெல்லாம் அருட்கொடையாக, இறுதி நபியாக இறைவனால் இப்புவிக்கு அனுப்பப்பட்ட ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது வாழ்நாளில் அதிகமான காலத்தை மக்காவிலேயே கழித்துள்ளார்கள். சுமார் ஐம்பத்து மூன்று வருடங்கள் மக்காவில் வாழ்ந்திருந்த காலப்பகுதியில் அவர்களின் வாழ்க்கையில் முக்கிய நிகழ்வுகள் பல நடந்துள்ளன. இந்நிகழ்வுகள் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்க்கையின் திருப்பு முனைகளாக அமைந்துள்ளன.

### வஹியின் ஆரம்பம்

தமது நாற்பதாம் வயதில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவிலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ள ஹிரா எனும் குகைக்குச் சென்று தனிமையில் தியானத்தில் இருப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

பல நாட்களுக்குத் தேவையான உணவைத் தயார்செய்து கொண்டு குகையிலேயே தங்கிவிடுவார்கள். உணவு முடிந்ததும் வீட்டுக்கு வந்து உணவு தயாரித்துக்கொண்டு மறுபடியும் குகைக்குச் சென்று விடுவார்கள். இவ்வாறு குகையில் தனித்திருந்தபோதுதான் வானத்தையும், பூமியையும் தொட்டுக் கொண்டிருக்கும் அளவுக்கு பிரம்மாண்டமான தோற்றத்தில் ஒருவர் நிற்பதைக் கண்டார்கள்.

அவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இறுகக் கட்டியணைத்து 'ஓதுவீராக!' எனக் கூறியபோது தமக்கு ஓதத் தெரியாது என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். மீண்டும் அவர் 'ஓதுவீராக!' எனக் கூற அப்போதும் தெரியாது என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதிலளித்தார்கள். பின்னர் அவர் இறுகக் கட்டியணைத்து ''படைத்த உமது இறைவனின் பெயரால் ஓதுவீராக'' என்று தொடங்கும் சில வார்த்தைகளைக் கூறினார். (இது 96வது அத்தியாயத்தில் முதல் ஐந்து வசனங்களாக இடம் பெற்றுள்ளன)

இப்படித்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறை தூதராக நியமிக்கப்பட்ட முதல் செய்தியும் அருளப்பட்டது. அவ்வேளை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதிர்ச்சியடைந்தவர்களாக மனைவியிடம் வந்தார்கள். தனது அனுபவத்தைத் தெரிவித்து அச்சங்கொண்டார்கள். அப்போது அவர், நீங்கள் பயப்பட வேண்டாம். அல்லாஹ் உங்களைக் கைவிடமாட்டான். ஏனெனில், நீங்கள் மக்களுக்கு உதவுகின்றீர்கள், ஏழைகளுக்கு வாரி வழங்குகின்றீர்கள், உறவினர்களை உபசரிக்கின்றீர்கள். என்று மனைவி கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஆறுதல் கூறினார்.

பின்னர் தமது உறவினரான வரகத் இப்னு நௌபல் என்பாரிடம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அழைத்துச் சென்றார்கள். இவர் முன்னைய வேதங்களைக் கற்றறிந்து, கிறிஸ்தவ மதத்தைத் தழுவியிருந்தார்.

நீர் இறைவனின் தூதராக நியமிக்கப்பட்டுள்ளீர் உம்மை உமது சமுதாயத்தினர் ஊரை விட்டு வெளியேற்றும் நிலையை அடைவீர். ஏனெனில், இறைதூதர்கள் பிரசாரம் செய்யும் போது இதுதான் நடந்துள்ளது என்று அவர் நம்பிக்கையூட்டினார். (நூல்: ஸஹீஹுல் புகாரி)

## அல் மிஃராஜ்

பல சமூகப் புறக்கணிப்புக்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் மத்தியில் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தஃவாப்பணி தொடர்ந்தது. நுபுவ்வத்தின் சுமார் பத்து ஆண்டுகளின் பின்னர் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பக்கபலமாக இருந்த இரண்டு பேரான அபூதாலிப் அவர்களும் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களும் வபாத்தாகின்றனர். இதனால் நபியவர்கள் பெரிதும் கவலை கொள்கின்றனர். இவ்வாறான ஒரு பின்னணியில்தான் மிஃராஜ் எனும் விண்ணுலக யாத்திரையை அல்லாஹ் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மன ஆறுதல் அளிக்கும் முகமாக ஏற்பாடு செய்தான்.

மிஃராஜ் பற்றிய செய்தியை ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு விளக்குகின்றார்கள்.

''நேற்றைய இரவு இறைவன் எனக்கு மகத்தான கண்ணியத்தைக் கொடுத்தான். நான் தூக்கத்தில் இருந்தேன். வானவர் தலைவர் என்னிடம் வந்து: என்னைக் கஃபாவின் முற்றவெளிக்கு அழைத்துச் சென்று என் இதயத்தைப் பிளந்து ஸம் ஸம் நீரினால் கழுவிவிட்டு என் பயணத்துக்காக புறாக் என்ற ஒரு பிராணியை ஏற்பாடு செய்தார். நான் அதிலேறிக் கொண்டதும் அது மிக வேகமாகச் சென்று பைத்துல் முகத்தஸை அடைந்தது. அங்குள்ள மஸ்ஜிதுல் அக்ஸாவில் நான் தொழுதேன். பின் அங்கிருந்து ஏழு வானங்களையும் கடந்து ஸித்ரதுல் முன்தஹாவை அடைந்தோம். வழியில் முன்னைய நபிமார்கள், மலக்குகள் போன்றோரைச் சந்தித்து ஸலாம் கூறினேன். பின் அல்லாஹ்வின் சன்னிதானத்தை அடைந்தோம். பின் அல்லாஹ் எம்முடன் உரையாடிய பின் எனக்குப் பரிசாக ஐம்பது நேரத் தொழுகையைத் தந்தான். திரும்பும் வழியில் நபி மூஸா (அலை) அவர்களின் ஆலோசனைக்கு இணங்க அது படிப்படியாகக் குறைக்கப்பட்டு ஐந்து நேரத் தொழுகையானது. அத்தோடு நரக வேதனைகள், சுவர்க்கத்து இன்பங்கள் எனக்குக் காண்பிக்கப்பட்டன. பின் பைத்துல் முகத்தஸை அடைந்து அங்கிருந்து மக்காவை அடைந்தோம் என்று முடித்தார்கள்.

# ஹிஜ்ரத்

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்நாளில் நடந்த இன்னும் ஓர் முக்கிய சம்பவம் ஹிஜ்ரத் ஆகும். மி.்.ராஜ் சம்பவத்துக்குப் பிறகு இஸ்லாம் மீதான அடக்கு முறைகள் அதிகரித்தன. இத்தடைகள் அதிகரித்ததைக் கண்ட ரஸூலுல்லாஹ் மக்காவில் தனது பிரசாரம் எடுபடாததைக் கண்டு மக்காவுக்கு வெளியே தமது பிரசாரத்தை மேற்கொள்ள உகந்த இடத்தைத் தேடிக் கொண்டிருந்தார்கள். தாயிபுக்குச் சென்றாலும் அங்கும் வெற்றி கிடைக்கவில்லை. பின்னர் மக்காவரும் யத்ரிப் யாத்திரிகர்களுக்குப் பிரசாரம் செய்தார்கள். இதன் காரணமாக யத்ரிபில் இஸ்லாம் படிப்படியாக அறிமுகம் செய்யப்படவே ''அகபா'' என்ற இடத்தில் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் யத்ரிப் வாசிகளுடன் ஓர் உடன்படிக்கையை மேற்கொண்டார்கள். அதற்கமைய யத்ரிபுக்கு வருமாறு ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து ஸஹாபாக்களைப் படிப்படியாக அங்கே அனுப்பிவைத்தார்கள். பின் அல்லாஹ்வின் உத்தரவின் பிரகாரம் தானும் புறப்பட ஆயத்தமானார்கள்.

இச்செய்தி குறைசிக்காபிர்கள் மத்தியில் பரவியதும். ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை யத்ரிபுக்குப் போகமுன் கொன்றுவிடத் திட்டமிட்டு அவர்களின் வீட்டை இரவோடு இரவாக முற்றுகையிட்டார்கள்.

தமது படுக்கையில் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களைப் படுக்க வைத்துவிட்டு அல்லாஹ்வின் உதவியுடன் வீட்டைவிட்டு வெளியேறி இடையில் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடன் மக்காவுக்குச் சிறிது தொலைவில் உள்ள தவ்ர் எனும் குகையை அடைந்தார்கள். எதிரிகள் அவர்களைத் தொடர்ந்து வந்து நோட்டமிட்டாலும் அவர்களின் கண்களில் பட்டுவிடாமல் அல்லாஹ் அவர்களைப் பாதுகாத்துவிட்டான். மூன்று நாட்கள் இவ்வாறு அக்குகையில் அவர்கள் தங்க வேண்டியேற்பட்டது. அவர்களுக்குத் தேவையான உணவு போன்ற வசதிகள் மறைமுகமாகச் செய்து கொடுக்கப்பட்டன. அடுத்த நாள் புறப்பட்டு ஒரு வழிகாட்டியின் துணையுடன் ஒரு மாற்று வழி ஊடாக யத்ரிபை அடைந்தார்கள். ரஸூலுல்லாவுக்கு அங்கே மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

ரஸூலுல்லாஹ் தமது அரசின் அடிப்படைத் தளமாக யத்ரிபை அமைத்துக் கொண்டார்கள். யத்ரிப் பின்னர் மதீனதுந்நபி என வழங்கப்பட்டு பின் மதீனா என்று அழைக்கப்படுகின்றது.

## ஒப்படைகள்

1. ''ஹிஜ்ரத் ரஸூலுல்லாஹ்வின் வாழ்வில் ஒரு திருப்புமுனையாகும்'' விளக்குக.

2. ''மி.்.ராஜ் ரஸூலுல்லாவுக்கு வழங்கப்பட்ட ஒரு பரிசாகும்'' விளக்குக.

## 7.2 நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மதீனா வாழ்க்கை

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மதீனா ஹிஜ்ரத் இஸ்லாமிய வரலாற்றில் மிகச் சிறப்பும் முக்கியத்துவமும் வாய்ந்த ஒரு நிகழ்வாகக் கருதப்படுகிறது. இந்த ஹிஜ்ரத் நபியவர்களின் வாழ்வில் ஒரு புதிய திருப்பத்தையும் இஸ்லாத்தின் வளர்ச்சியில் ஓர் உத்வேகத்தையும் ஏற்படுத்தியது. முஸ்லிம்களின் ஹிஜ்ரி ஆண்டு இதிலிருந்தே ஆரம்பமாகிறது.

துன்பமும் தோல்வியும் நிறைந்த காலம் மறைய ஆரம்பித்தது. குறைஷிகளினால் துன்புறுத்தப்பட்ட நபியவர்கள் மக்காவைத் துறந்து மதீனாவினுள் பிரவேசித்தார்கள் மதீனா மக்கள் அனைவரும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதோடு, மக்காவிலிருந்து வந்த முஹாஜிர்களுக்குத் தங்கள் வீடுகள், பொருள், நிலம் அனைத்தையும் வழங்கி உதவினார்கள். நபியவர்கள் மதீனாவில் வாழ்ந்த அன்ஸாரிகளுடன் முஹாஜிர்களை இணைத்து வைத்தார்கள்.

மஸ்ஜிதுன் நபவி (பள்ளிவாசலை) நிறுவினார்கள். மதீனாவின் சமய, சமூக, அரசியல் நிலையமாகவும் மஸ்ஜிதுன் நபவி விளங்கியது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறைவனை அடைவதற்கான பாதையைப்பற்றியும். சமாதானம் சகோதரத்துவம் போன்ற உன்னத கொள்கைகளைப் பற்றியும் போதித்தார்கள். குலப் பெருமை, கொலைவெறி போன்ற தீவினைகளையும், மக்களிடையே ஏற்பட்டிருந்த பிளவுகளையும் நீக்கி அவர்களை இஸ்லாம் என்னும் ஒரு கொடியின் கீழ் ஒன்றுபடச் செய்தார்கள். அவ்ஸ், கஸ்ரஜ் வர்க்கத்தாரிடையே பல தலைமுறைகளாக நிலவி வந்த பகைமையைச் சுமுகமாகத் தீர்த்து வைத்தார்கள். அல்லாஹ்வுக்குச் செய்யவேண்டிய கடமைகளான ஹுகூகுல்லாஹ்வையும், அடியார்கள் அடியார்களுக்குச் செய்ய வேண்டிய ஹுகூகுல் இபாத்தினையும் பற்றி முழுமையான தெளிவைக் கொடுத்தார்கள்.

இங்கே முஸ்லிம்களைத் தொழுகைக்கு அழைப்பதற்கான அதான் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இறைவனின் உத்தரவுப்படி ''பைதுல் முகத்தஸை'' நோக்கியிருந்த தொழுகையின் ''கிப்லா'' திசை கஃபாவை நோக்கி மாற்றப்பட்டது. கட்டாய நோன்பு நோற்கவென றமழான் மாதம் நிர்ணயிக்கப்பட்டது. ''ஈதுல் பித்ர்'', ''ஈதுல் அழ்ஹா''வுக்குரிய தினங்கள் பெருநாள் தினங்களாக அறிமுகப்படுத்தப்பட்டன. இந்த மாற்றங்களெல்லாம் அல்லாஹ்வின் உத்தரவினாலேயே நிகழ்ந்தன.

உண்மையிலேயே இது உலக வரலாற்றிலே மிக முக்கியமான நிகழ்வாகும். என்றைக்குமே ஏற்பட்டிராத ஒரு வெற்றியாகும். இதன் மூலம் மனித சமூகத்துக்குத் தேவையான சகல அம்சங்களையும் உள்ளடக்கிய ஒரு சீர்த்திருத்தம் உண்டாகியது. பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மானிடப் புரட்சி, சமயத்தையும், அரசியலையும் மட்டுமன்றி மக்காக் குறைஷிகளை ஆட்டங்காணவும் அமைதி இழக்கவும் செய்தது.

இது மக்காக் குறைஷியர்க்குப் பெரியதோர் ஆபத்தைக்கொண்டு வரலாம் என்று அவர்கள் நம்பினர். எனவே அவர்கள் மதீனாவிலே நிறுவப்பட்ட இஸ்லாமியக் கட்டமைப்பை வேரோடு அழித்துவிடத் தீர்மானித்தனர். இத்தீர்மானம் போர்களிலே முடிந்தது. இதே சந்தர்ப்பத்தில் ஹிஜ்ரி - 1ம் வருடம் பிற்பகுதியில் ஒரு நாள் தற்பாதுகாப்பின் பொருட்டு

யுத்தம் செய்வதை அனுமதித்து நபியவர்களுக்கு அல்லாஹ் குர்ஆன் ஆயத்துக்களை அருளினான்.

இஸ்லாமிய வரலாற்றில் நடைபெற்ற முதலாவது யுத்தம் பத்றுயுத்தமாகும். 'பத்ர்' என்னும் இடத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தலைமையில் 313 முஸ்லிம்களைக் கொண்ட ஒரு படை ஆயுதம் தாங்கிய 1000 எதிரிகளோடு போர் செய்து வெற்றியீட்டினர். இப்போர் இஸ்லாமிய வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தையும் மகத்தான மாற்றத்தையும் ஏற்படுத்தியது. இஸ்லாம் என்ற சத்திய மார்க்கம் அசத்தியத்தோடு போரிட்டு வெற்றி பெற்றது. அறியாமையின் ஆதிக்கத்திற்குச் சவக்குழியொன்று தோண்டப்பட்டது. பத்றுப்போரில் வெற்றி பெற்ற குழந்தைப்பருவத்திலிருந்த இஸ்லாத்தைத் துரித வளர்ச்சி பெற செய்ததோடு அதன் செல்வாக்கை அறபு நாடெங்கும் பரவ வழிவகுத்தது. பெருமானார் மதீனாவில் பெற்றிருந்த செல்வாக்கை மேலும் வலுப்பெறச்செய்தது. முஸ்லிம்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையை மேலும் பலம் பெறச்செய்தது. மதீனாவிலே அஞ்சி அஞ்சி வாழ்ந்த முஸ்லிம்கள் தலை நிமிர்ந்து வாழலானார்கள். பத்று வெற்றியே முஸ்லிம் வீரர்களுக்குப் பிற்காலத்தில் பெற்ற வெற்றிகளுக்கெல்லாம் அடித்தளமாக அமைந்தது.

பத்றுயுத்தத்தில் குறைஷிகள் தாம் அடைந்த தோல்விக்கு முஸ்லிம்களைப் பழிவாங்க முன்வந்தனர். அதுமட்டுமன்றி பத்று வெற்றியைத் தொடர்ந்து பலர் இஸ்லாத்தில் தாமாக நுழைந்தமையால் குறைஷியரின் பொறாமை காரணமாக முஸ்லிம்களை தலைதூக்கவிடாமல் தடுக்க முயன்றனர். எனவே 3000 வீரர்களுடன் எதிரிப்படையொன்று மதீனா நோக்கி வந்து அங்கிருந்து வடக்கே உள்ள உஹுத் என்ற மலைச்சாரலில் முகாமிட்டது. அண்ணலார் அவர்கள் சுமார் 1000 பேர் கொண்ட படையொன்றைத்திரட்டி உஹுத் மலைச்சாரலை நோக்கிச் சென்றார்கள்.

நயவஞ்சகர்களின் தலைவன், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மேல் குற்றம் சுமத்தி தன் தோழர்கள் 300 பேரையும் திருப்பி அழைத்துக் கொண்டு மதீனாவுக்குப் போய்விட்டான். இதனால் முஸ்லிம் வீரர்கள் 700 பேர் போரில் கலந்து கொண்டனர். இவ்யுத்தத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தாக்கப்பட்டு அவர்களின் பல்லொன்றும் உடைந்தது. ஆரம்பத்தில் முஸ்லிம்களுக்குச் சாதகமாக அமைந்து இறுதியில் பாதகமாக அமைந்தது.

அது முஸ்லிம்களுக்குப் படிப்பினையாக அமைந்தது. அதாவது முஸ்லிம்கள் தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படுவதை வலியுறுத்தியது. மேலும் செல்வத்தை விட இஸ்லாமே முக்கியம் என்பதைக் கற்றுக்கொடுத்தது. மதீனாவில் இருக்கும்போது முஸ்லிம்களின் ஆதரவாளர்களாக நடித்துக் கொண்டிருந்த முனாபிக்குகளை இனங்காட்டியது. அத்தோடு வெற்றியிலும் தோல்வியிலும் முஸ்லிம்களின் தளரா மன உறுதி வெளிக் காட்டப்பட்டது.

எனினும் பனூகைனூகா, பனூநளிர், பனூகுறைழா ஆகிய மூன்று யூதவர்க்கத்தினரும் சேர்ந்து முஸ்லிம்களுக்கிடையில் சிறு சிறு பிரச்சினைகளை உண்டாக்கி குழப்பங்களைச் செய்தனர். இஸ்லாத்தையே வேரோடு அழிக்கும் பணியிலும் இரகசியமாக ஈடுபடலாயினர். யூதர்கள் முஸ்லிம்களை ஆதரிப்பதுபோல நடித்துக்கொண்டு பிரச்சினைகளை உண்டாக்கினர். இவர்களோடு சமாதானமாக நடந்துகொள்ள அண்ணலார் அவர்கள் பல தடவைகள் முயன்றும் தோல்வியே கிடைத்தது. பின்னர் யூதர்கள் கைபர் என்னும் இடத்திற்கு நாடுகடத்தப்பட்டார்கள். நாடுகடத்தப்பட்டவர்களின் தூண்டுதலால் 10,000 வீரர்களைக் கொண்ட எதிரிப் படையொன்று மதீனாவை அழித்தொழிக்கும் எண்ணத்தோடு திரண்டு வந்தது. எனவே இம்மாபெரும் எதிர்ப்பு சக்தியைத் திறந்தவெளியில் எதிர்ப்பது உகந்ததன்று எனக் கருதி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன் தோழர்களுடன் ஆலோசனை

செய்தார்கள். ஸல்மானுல் பாரிஸி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் அபிப்பிராயப்படி மதீனா நகரைச் சூழ அகழி தோண்டினர். இது எதிரிகளுக்குத் தடையாக அமைந்தது.

இவ்யுத்தத்தில் முஸ்லிம்களின் படையில் 3000 பேர் பங்குகொண்டார்கள். இது ஹிஜ்ரி - 5ம் ஆண்டு நடைபெற்றது. இதனை ''அஹ்ஸாப்'' கோஷ்டிகளின் யுத்தம் என வரலாற்றில் அழைக்கப்பட்டது. ஏனெனில் மக்கா குறைஷிகள் மட்டுமன்றி மதீனாவிலிருந்து நாடுகடத்தப்பட்ட கோத்திரங்களும் பங்குகொண்டமையாலாகும். மேலும் ஹந்தக் போர் எனவும் இவ்யுத்தம் அழைக்கப்படுகிறது. இறுதியில் முஸ்லிம்களுக்கே வெற்றி கிடைத்தது.

இஸ்லாத்தின் வளர்ச்சிக் கட்டத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஸ்லிம்களுடனும், யூதர்களுடனும், குறைஷிகளுடனும் வெவ்வேறான பல உடன்படிக்கைகள் செய்து கொண்டார்கள்.

இவை இஸ்லாத்தின் வளர்ச்சிக்கும், விருத்திக்கும் பல்வேறு வகையில் துணை நின்றன. எனினும் மீண்டும் யூதர்களின் அட்டூழியங்கள் செய்தார்கள். இவ்வாறான யூதர்களின் அட்டூழியங்களை அடக்குவதற்கான ஒரே வழி போராகவே அமைந்தது. ஆனபடியால் தான் ஹிஜ்ரி - 7ல் கைபர் யுத்தமும், ஹிஜ்ரி - 9ல் தபூக் யுத்தமும் இடம் பெற்றன.

## ஹுதைபியா உடன்படிக்கை

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் முன்னெடுக்கப்பட்ட உடன்படிக்கையில் ஹுதைபியா உடன்படிக்கையே பிரதான இடத்தை வகிக்கின்றது. இவ்வுடன்படிக்கை ஹிஜ்ரி 6ம் ஆண்டு முஸ்லிம்களுக்கும், குறைஷிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 1400 தோழர்களோடு உம்றா வணக்கத்தை நிறைவேற்றுவதற்காக மக்காவை நோக்கிப் புறப்பட்டனர். இவ்வாறு அவர்கள் மக்காவிற்கு வருவதை அறிந்த குறைஷிக்காபிர்கள் அவர்களை மக்காவில் நுழைய விடாது தடுத்தனர். நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், உஸ்மான் (றழி) அவர்களை குறைசியரிடம் தமது தூதுவராக அனுப்பினார்கள்.அவர் திரும்பி வரத் தமதமாகியதால் குறைசியர் அவரை கொலை செய்து விட்டார்களோ எனச் சந்தேகமேற்பட்டது.இந்த இடத்தில் நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபாக்களுடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டார்கள். இச்சந்தர்ப்பத்தில் குறைசியரிடம் சென்ற உஸ்மான் (றழி) அவர்கள் திரும்பி வந்தார்கள். இதனைத் தொடர்ந்து இருதரப்பினருக்குமிடையில் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றன. இதன் பின் போர் நிறுத்த ஏற்பாடு ஒன்று கைச்சாதிடப்பட்டது.

## இதன் முக்கிய அம்சங்கள்

1. பத்து வருடங்கள் வரை இரு சாராரும் போர்புரிவதில்லை.
2. எத்தகைய அச்சமுமின்றி இரு தரப்பினரும் நாட்டில் வாழ வேண்டும்.
3. முஸ்லிம்கள் இவ்வருடம் மக்காவில் பிரவேசிக்கக் கூடாது. அடுத்த வருடம் மக்காவுக்கு வரும்போது நிராயுதபாணிகளாக வந்து மூன்று தினங்கள் தங்கியிருக்கலாம். அம்மூன்று தினங்களிலும் குறைஷியர் வெளியே சென்றுவிடுவர்.
4. குறைஷியரில் எவரேனும் உத்தரவின்றி மதீனாவுக்கு வந்துவிட்டால் அவரைத் திருப்பி அனுப்பிவிடவேண்டும். அதற்கு மாறாக முஸ்லிம்கள் (மக்காவுக்கு) வந்துவிட்டால் அவர்கள் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள்.
5. இரு கட்சியினரும் தத்தமக்குரிய வேறு கோத்திரத்தாருடன் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளலாம். ஆனால் குறைஷியரின் நண்பர்களை முஸ்லிம்கள் எதிர்ப்பது கூடாது. அவ்வாறே முஸ்லிம்களின் நண்பர்களையும் குறைஷியர் தாக்குவது கூடாது.

போன்ற நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன.

# மக்கா வெற்றி

ஹுதைபியா உடன்படிக்கையை மீறி குறைஷியரின் நேசக்கூட்டத்தினரான ''பக்ர்'' வம்சத்தினர் சிலர் முஸ்லிம்களின் நேசக்கூட்டத்தினராகிய ''குஸாஆ'' வர்க்கத்தவரை கொடூரமாய் படுகொலை செய்தனர். மக்காவாசிகள் சமாதானம் செய்யாமல் முஸ்லிம்களை யுத்தத்திற்குவருமாறு அழைத்தனர்.

ஹிஜ்ரி - 8ம் ஆண்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 10,000 முஸ்லிம் வீரருடன் சென்று இரத்தம் சிந்தாமல் மக்காவைக் கைப்பற்றினார்கள். அங்குள்ளாருக்குப் பெருந்தன்மையுடன் மன்னிப்பை அளித்தார்கள். தலை குனிந்து நின்ற எல்லாக் குறைஷியரையும் நோக்கி நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''சகோதரர்களே! நீங்கள் என்னிலிருந்து எத்தகைய நீதியை எதிர்பார்த்திருக்கிறீர்கள்'' என்று வினவ அவர்கள் எல்லோரும் ''நீர் ஒரு மேலான சகோதரராயிருக்கின்றீர் ஒரு மேலான சகோதரரின் புத்திரராயிருக்கின்றீர்'' என்று தயங்காது சட்டென விடையளித்தார்கள் 18 வயதுடைய ''இதாப் இப்னு உஸைத்'' என்பவரை மக்காவிற்கு கவர்னராக நியமித்துவிட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் ஸஹாபாக்களும் மதீனா சென்றுவிட்டார்கள். மக்கா பிடிக்கப்பட்டபொழுது தான் அபூசுபியான் அவர் மகன் முஆவியா, அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் தகப்பன் அபூகுஹாபா ஆகியோர் இஸ்லாத்தைத் தழுவினர்.

ஹிஜ்ரி 9ல் ''பராஅதும் மினல்லாஹி'' என ஆரம்பமாகும் என்னும் குர்ஆன் வசனத்தின் மூலம் இணைவைப்பதை முற்றாக ஒழித்தார்கள். ஹிஜ்ரி 10 இலேயே முஸ்லிம்கள் மக்கா சென்று ஹஜ்ஜை நிறைவேற்றினார்கள்.

## நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்க்களின் இறுதி ஹஜ் உபதேசம்

ஹிஜ்ரி 10ல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவிலிருந்து ஹஜ் வணக்கத்தை நிறைவேற்ற மக்கா செல்லப் புறப்பட்ட போது பல இலட்சக்கணக்கான முஸ்லிம்களும் அவர்களோடு சென்றார்கள். அறபு நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் சென்றனர். ஹஜ்ஜின் நடைமுறைகளைப் படிமுறையாகச் செய்து காட்டிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் துல்ஹஜ் 9ம் நாள் அறபா மைதானத்தை அடைந்தார்கள். அப்போது வெள்ளமெனத் திரண்டிருந்த மக்கள் மத்தியில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜபலுர் ரஹ்மா என்ற மலையடிவாரத்தில் தனது ஒட்டகை மீது ஏறியவர்களாக சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தனது உரையை நிகழ்த்தினார்கள். இச்சந்தர்ப்பத்தில் நிறைவேற்றிய ஹஜ்ஜே ''ஹஜ்ஜதுல் விதா'' பிரியாவிடை ஹஜ் எனப்படுகிறது. இதன் போது அவர்கள் ஆற்றிய அரபாப் பேருரையின் சுருக்கம் வருமாறு:

''மக்களே! எனது வார்த்தைகளைச் செவிதாழ்த்திக் கேளுங்கள் இந்நாளும் இம்மாதமும், இவ்விடமும் எவ்வாறு புனிதமானதாய் இருக்குமோ அவ்வாறே உங்கள் உயிரும், உடமைகளும், அந்தஸ்தும், இறுதி நாள் வரை புனிதமானதாகும். நிச்சயமாக நீங்கள் அனைவரும் உங்கள் இறைவனைச் சந்திப்பீர்கள். உங்கள் செயல்களுக்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டியவர்களாக இருப்பீர்கள். எச்சரிக்கையாக இருங்கள் உங்களில் குற்றம் செய்யும் ஒவ்வொருவரும் தானே அக்குற்றத்திற்கு பொறுப்பாளியாவார். தந்தை மகனின் குற்றத்திற்கும் மகன் தந்தையின் குற்றத்திற்கும் பொறுப்பாளி அல்ல.''

‘‘இன்று முதல் நீங்கள் என்றுமே வட்டி வாங்கக் கூடாது. எனது சிறிய தந்தை அப்பாஸுக்கு நீங்கள் கொடுக்க வேண்டிய வட்டியையும் நான் நீக்கிவிட்டேன். அறியாமைக் காலத்தில் நிலவிய பழிக்குப் பழி வாங்கும் வழக்கம் இனி இருக்கக் கூடாது. எனது குடும்பத்தைச் சேர்ந்த நபியா என்பவரின் பழியை இத்துடன் நீக்கிவிடுகிறேன்.’’

‘‘மக்களே உங்கள் நாட்டிலே தன்னுடைய ஆதிக்கத்தை நிறுவ முடியாத ஷைத்தான் மனம் வெதும்பியுள்ளான். நீங்கள் அற்ப விசயத்திலாயினும் அவனுக்கு வழிபடுவீர்களாயின் அவன் பெரும் மகிழ்ச்சி அடைவான். ஆகவே, வணக்கத்திற்குரிய இறைவன் ஒருவனே என்று நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கையைப்பற்றி மிகவும் எச்சரிக்கையாக இருங்கள்’’

‘‘நான் சொல்வதற்கு செவிகொடுங்கள் உங்கள் இறைவனைத் தொழுங்கள், ஐங்காலத்தொழுகையை நிறைவேற்றுங்கள். றமழான் மாதத்தில் நோன்பு வையுங்கள், க.்.பாவுக்கு வந்து ஹஜ்ஜு செய்யுங்கள், உங்கள் சொத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஸக்காத்தைக் கொடுங்கள், நான் கூறும் கட்டளைகளை நிறைவேற்றுங்கள் அவ்வாறு செய்வீர்களாயின் சுவனம் செல்வீர்கள். எனக்குப் பின்னர் நீங்கள் வழிதவறிவிடாதீர்கள் அவ்வாறு வழிதவறினால் நீங்களே ஒருவர் கழுத்தை மற்றொருவர் அறுத்துக் கொள்ளும் நிலை ஏற்பட்டுவிடும்.’’

‘‘இன்று நான் உங்களிடம் இரண்டை விட்டுச்செல்லுகின்றேன். அவற்றை உறுதியாகப்பற்றிப்பிடித்துக் கொண்டிருக்கும் காலமெல்லாம் நீங்கள் வழிதவற மாட்டீர்கள். அவை அல்லாஹ்வின் வேதம் (அல்குர்ஆன்)உம் (அவனுடைய திருத்தூதரான) எனது வழிமுறையுமாகும்’’ (சுன்னா)

இது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 124000 ஸஹாபாக்களுக்கு மத்தியில் நிகழ்த்திய ஒரு பிரசங்கமாக மட்டுமன்றி, முஸ்லிம்களுக்கான பிரகடனமாகவும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ரிஸாலத் பணியின் சாரம்சமாகவும் அமைகிறது. ஆகவே நபிகளாரின் இறுதி ஹஜ் பிரசங்கம் வரலாற்றிலே மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது. முஸ்லிம்களின் வாழ்க்கைச் சிறப்புக்காக நிகழ்த்தப்பட்ட பெருமானாரின் போதனைகளை இப்பிரசங்கம் நினைவூட்டியது. பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொண்டிருந்த இலட்சிய சமுதாயம் பற்றிய கருத்துக்களையும் சகோதரத்துவத்தின் அடிப்படையில் அமைந்த சமுதாயத்தின் தத்துவத்தையும் இந்தப் பிரசங்கம் வெளியிட்டது.

இறுதியில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹிஜ்ரி 11ம் ஆண்டு ரபிஉல் அவ்வல் மாதம் தமது 63வது வயதில் இவ்வுலகை விட்டு மறைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்

| போர்கள் / முக்கிய நிகழ்வுகள் | நிகழ்ந்த ஹிஜ்ரி ஆண்டு |
|---|---|
| பத்று யுத்தம் | ஹி - 2 |
| உஹத் யுத்தம் | ஹி - 3 |
| அகழி யுத்தம் | ஹி - 5 |
| ஹுதைபியா உடன்படிக்கை | ஹி - 6 |
| கைபர் யுத்தம் | ஹி - 7 |
| மக்கா வெற்றி | ஹி - 8 |
| தபூக் யுத்தம் | ஹி - 9 |
| ஹஜ்ஜதுல் விதா | ஹி - 10 |
| நபி (ஸல்) வபாத் | ஹி - 11 |

## செயற்பாடு

1. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மதீனா வாழ்வில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகளை அட்டவணைப்படுத்துக.

**பொருத்தமான சொற்களை வைத்து வெற்றிடங்களை நிரப்புக.**

1. ஹிஜ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்வில் ..................................... ஏற்படுத்தியது.
2. முஸ்லிம்களின் ஆண்டு முறை ........................................ சம்பவத்திலிருந்து ஆரம்பமாகிறது.
3. மக்காவிலிருந்து வந்த முஹாஜிர்களுக்கு ..................... அனைத்தையும் வழங்கி உதவினார்கள்.
5. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறைவனை அடைவதற்கான..................... சகோதரத்துவம் போன்ற உன்னத கொள்கையைப் பற்றியும் போதித்தார்கள்.
6. ''பத்று'' யுத்தத்தின் விமர்சனமாக சூரத்துல் ................................... அருளப்பட்டுள்ளது.

**விடை தருக.**

1. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்களை இஸ்லாம் எனும் ஒரு கொடியின் கீழ் கொண்டுவருவதற்கான காரணிகள் யாவை?
2. அகழி யுத்தத்திற்கு அகழி தோண்ட ஆலோசனை வழங்கியவர் யார்?
3. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் யார் யாருடன் உடன்படிக்கைகளை செய்து கொண்டார்கள்?
4. ஹுதைபியா உடன்படிக்கை நிகழ்ந்ததற்கான காரணம் யாது?
5. மதீனாவில் வாழ்ந்த யூத கோத்திரங்களின் பெயர்களைத் தருக.
6. ஹுதைபிய்யா உடன்படிக்கையின் மூலம் முஸ்லிம்களுக்குக் கிடைத்த பயன்கள் யாவை?
7. ஹிஜ்ரத்தின் பின்பு முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட சாதகமான விளைவுகளைக் குறிப்பிடுக.

## 7.3 உம்மஹாதுல் மு□மினீன்

## (விசுவாசிகளின் அன்னையர்)

நபியவர்கள் இருபத்தைந்து வயதான போது கதீஜா ரழியல்லாஹ¨ அன்ஹா நாயகியை மணமுடித்து 50 வயது வரை அவர்களுடன் மட்டும் வாழ்ந்து வந்தார்கள். பின்னர் பல நோக்கங்களின் அடிப்படையில் ஸௌதா ரழியல்லாஹ¨ அன்ஹா, ஆயிஷா ரழியல்லாஹ¨ அன்ஹா, ஹப்ஸா ரழியல்லாஹ¨ அன்ஹா, ஸைனப்பின்து குஸைமா ரழியல்லாஹ¨ அன்ஹா, உம்முஸல்மா ரழியல்லாஹ¨ அன்ஹா, ஸைனப்பின்து ஜஹ்ஷ் ரழியல்லாஹ¨ அன்ஹா, ஜு¨வைரியா ரழியல்லாஹ¨ அன்ஹா, உம்முஹபீபா ரழியல்லாஹ¨ அன்ஹா, ஸபிய்யா ரழியல்லாஹ¨ அன்ஹா, மைமூனா ரழியல்லாஹ¨ அன்ஹா ஆகிய பத்து பரிசுத்த நாயகிமார்களை மணந்தார்கள். இவர்களுக்கு 'உம்மஹாதுல் மு.். மினீன்' (விசுவாசிகளின் அன்னையர்) என்று சொல்லப்படும்.

நபி ஸல்லல்லாஹ¨ அலைஹி வஸல்லம் அவர்களின் முதல் மனைவி கதீஜா நாயகி ஆவார். ''உம்மு ஹிந்து'' என்பது அன்னாரின் புனைப்பெயராகும். ''தாஹிரா'' (பரிசுத்தமானவர்) என்பது அவர்களின் சிறப்புப்பெயர். இவர்கள் நாற்பது வயது நிரம்பியவர்களாயும், நபியவர்கள் இருபத்தைந்து வயதுடையவராகவும் இருக்கும் போதே திருமணம் செய்தார்கள். கதீஜா நாயகியின் நற்குணம், நல்லொழுக்கம் அவர் தன்னை விரும்பியதும் அவரிடத்திலுள்ள திரண்ட செல்வம் இஸ்லாமியப்பணிக்கு உதவும் என்பதாலும் நபியவர்கள் கதீஜாவை மனப்பூர்வமாக ஏற்றார்கள். இவர்களுக்கு மட்டுமே ஆறு குழந்தைகள் கிடைத்தன. அவர்கள் ஸைனப், றுகையா, உம்முகுல்தூம், பாத்திமா என்ற பெண் குழந்தைகளும், காஸிம், அப்துல்லாஹ் என்ற ஆண் குழந்தைகளும் ஆவர். பெருமானார் அவர்கள் ஒரு நபியே என்பதை கதீஜா நாயகி பூரணமாக நம்பினார்கள். ஆதலால் அவரது விடயங்களில் இவர் மிக்க ஆதரவு காட்டினார்கள். ஹிராக்குகையில் நபியவர்கள் பல நாட்கள் தியானத்தில் தொடர்ந்திருந்தபோது உணவும், நீரும் கொண்டு சென்றார்கள். குர்ஆன் இறங்கிய முதல் சம்பவத்தின்போது காய்ச்சலோடு வீட்டுக்கு வந்த நபியவர்கள் எனக்குப் பயமாயிருக்கிறது என்று கூற அதற்கு கதீஜா நாயகி பயப்படாதீர்கள் நிச்சயமாக இது அல்லாஹ் உங்களோடு தொடர்பு கொண்ட சம்பவமே, அல்லாஹ் உங்களைக் கைவிடமாட்டான். என்று ஆறுதல் கூறினார்கள் ''ஷி.ஃபு அபுதாலிப்'' என்னும் பள்ளத்தாக்கில் நாயகமவர்களும், ஹாஷிம் வர்க்கத்தினரும் மூன்று வருடங்கள் தடுக்கப்பட்டு அவதியுறும் போது ஹதீஜா நாயகியும் அதில் பங்கு கொண்டு தன் செல்வமனைத்தையும் செலவு செய்தார்கள். 25 ஆண்டுகள் நபி (ஸல்) அவர்களுடன் வாழ்ந்தார்கள். கதீஜா நாயகி உயிருடன் இருக்கும் போது மக்காக் காபிர்கள் நாயகமவர்களுக்கு அதிக தீங்கு எதுவும் செய்யத் துணியவில்லை என்பதிலிருந்து நாயகமவர்களின் துணைவியின் தன்மை நன்கு விளங்குகிறது.

கதீஜா ரழியல்லாஹ¨ அன்ஹா வபாத்தானபின் நாயகமவர்களும் சிறு குழந்தைகளுடன் சிரமப்பட்டுக் கொண்டிருக்கையில் பெண் பிள்ளைகளைப் பராமரிப் பதற்காக ஸவ்தா ரழியல்லாஹ¨ அன்ஹா அவர்களை மணமுடித்தார்கள். இவர்கள் இஸ்லாத்தின்

ஆரம்பகாலத்திலேயே இஸ்லாத்தை ஏற்றிருந்தார்கள். 400 திர்ஹம் மஹர் நியமிக்கப்பட்டு நுபுவ்வத் 10ம் ஆண்டு மணமுடித்தார்கள். இவர்கள் சாதாரண, எளிய குழந்தை போன்ற குணம் படைத்தவர்கள். தர்ம சிந்தனையிலும் தாராள குணத்திலும் மேம்பட்டவர்கள். நபிகளாரின் குழந்தைகள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அடைக்கலப் பொருட்கள் எனக்கொண்டு பராமரித்து வந்தார்கள். ஸவ்தா நாயகி இவ்வாறு குடும்பத்தைக் கையேற்றதால் நாயகமவர்கள் தம் பணிகளில் ஈடுபட முடிந்தது.

ஆயிஷா நாயகியை நாயகமவர்கள் திருமணம் செய்து கொண்டது ''தெய்வீக சம்பந்தம்'' என்று கூறுவார்கள். 500 திர்ஹம் மஹர் கொடுத்தார்கள். இவர்களுக்கு ''ஸித்தீக்கா'', ''அல்ஹுமைறா'' என்பன சிறப்புப் பெயர்களாகும். உம்மு அப்தில்லாஹ் என்பது புனைப்பெயர் ஆகும். ஆயிஷா நாயகி மிக்க விவேகமும், ஞாபகசக்தியும், தைரியமும், வீரமும், பொறுமையும் உடையவர்களாக காணப்பட்டார்கள்.

சுமார் 2210 ஹதீஸ்கள் இவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளன. கல்வியிலும் பாண்டித்தியம் பெற்றவராயிருந்தார்கள். ஸஹாபாக்கள் கொண்டுவரும் சில சிக்கலான மார்க்கப் பிரச்சினைகளை இவர் தன் அறிவின் நுட்பத்தால் தீர்த்து வைத்துள்ளார்கள். வைத்தியம், சட்டம், குர்ஆன் முதலானவற்றில் மிக்க அறிவுடையவரான ஆயிஷா நாயகி மார்க்கத்தீர்ப்புகளும் கூறியிருக்கிறார்கள்.

அவர்களுக்கு விவாகமாகும் போது ஒன்பது வயதேயாகும். இவர்கள் 18 வயதில் விதவையானார்கள். சுமார் 57 அடிமைகளை விலைக்கு வாங்கி விடுதலை செய்துள்ளார்கள். பெருமானாரின் மனைவிமார்களுள் இவர்கள் பிறவிலேயே இஸ்லாமானவர். நாயகமவர்கள் மணமுடித்த ஒரேயொரு கன்னிப்பெண்ணும் இவரே. உஹத் யுத்தத்தில் காயமானோர்களுக்கு நீர் கொண்டுவந்து புகட்டினார்கள்.

ஹஸ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அன்னாரின் விருப்பப்படி நாயகமவர்களுக்கு ஹப்ஸா நாயகியை திருமணம் செய்து கொடுத்தார்கள். ஆயிஷா நாயகிக்கு அடுத்து கல்வியறிவிற் சிறந்தவர். 60 ஹதீஸ்களை கூறியிருக்கிறார்கள். வணக்கங்களிலும், மற்றையோருக்கு கல்வி புகட்டுவதிலும் பொழுதைக் கழித்தார்கள். தந்தை உமர் ரழியல்லாஹு அன்ஹு வைப் போன்று திடசித்தமுள்ளவர். அல்குர்ஆனின் பிரதி உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களால் இவர்களிடம் கொடுத்து வைக்கப்பட்டிருந்தது.

உம்முல் மஸாகீன் (ஏழைகளின் அன்னை) என்று சிறப்புப் பெயர் பெற்றிருந்த ஸைனப்பின்த் குஸைமா அவர்கள் ஏழைகளிடத்தில் மிக்க இரக்க சிந்தனையுள்ளவர். இவர்களின் கணவர் உஹத் யுத்தத்தில் வீர சுவர்க்கம் புகுந்த பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆதரவற்ற ஸைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்களை விவாகம் செய்தார்கள்.

அன்னை உம்முஸல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்களும் ஒரு விதவையே. அன்னை உம்முஸல்மா அவர்களை ஹிஜ்ரி - 4ம் ஆண்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மணந்தார்கள். இவரின் பெயர் ''ஹிந்த்'' என்பதாகும். உம்முஸல்மா என்பது காரணப் பெயராகும். ஹபஷா, மதீனா ஆகிய ஹிஜ்ரத்துக்களிலும் தன் கணவரோடு பங்குகொண்டார்கள். 378 ஹதீஸ்களை இவர்கள் கூறியிருக்கிறார்கள், அகழி, கைபர் ஆகிய யுத்தங்களின் போது இவர் பிரசன்னமாயிருந்தார்கள். ஹுதைபியா உடன்படிக்கையின் போது தோழர்களின் மனநிலையையறிந்து சில நற்புத்திகளும் கூறி நிலையை ஒழுங்கு பண்ணினார்கள். ஒழுக்கமும் ஞானமும் நிறைந்தவர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிராட்டிமாரில் இவர்களே கடைசியாகத் தமது 84ம் வயதில் ஹிஜ்ரி - 63ல் மரணமானார்கள்.

ஹிஜ்ரி - 5ம் ஆண்டில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அன்னை ஸைனப்பின்த் ஜஹ்ஸ் ரழியல்லாஹு அன்ஹா அவர்களை விவாகம் செய்தார்கள். இவர்களின் இத்தகைய விவாகமும் இஸ்லாத்தில் உயர்வு, தாழ்வு என்பது கிடையாதென்பது, வெறும் வேதாந்தமல்ல என்பதை உணர்த்தும் ஆதாரங்களுளொன்றாகும். பெண்கள் பர்தாவுக்குள் அடக்கமாயிருக்க வேண்டுமென்ற கட்டளையும் இந்த சமயம் தான் பிறந்தது. இவ்விவாகம் நடந்தேற வேண்டும் என்பது பற்றி திருக்குர்ஆனிலும் கூறப்பட்டுள்ளது. இவர்கள் அல்லாஹ்வின் அன்பைக் கருதி எதை வேண்டுமானாலும் செய்பவராகவும் இருந்தார்கள். இதனால் இவரைக் காட்டிலும் மேலான ஒரு பெண்மணியை கண்டதில்லை என ஆயிஷா நாயகி கூறியுள்ளார்கள். இவரே ஊசி கொண்டு தாமே வலைபின்னி விற்று வாழ்க்கை நடாத்தினார்கள். பெரும் கொடை வள்ளலாக இருந்ததனால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''நீண்டகையுடையவர்'' எனக் குறிப்பிட்டார்கள். இவர் ஹிஜ்ரி 20ம் ஆண்டு தமது 53ம் வயதில் இறையடி சேர்ந்தார்கள்.

அன்னை ஜுவைரியா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஒரு யுத்தத்தில் முஸ்லிம்களால் பிடிக்கப்பட்டார்கள். இவர்களை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருமணம் செய்தார்கள். இவர்களின் பெயர் பர்ரா என்பதாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே இவரின் பெயரை ஜுவைரியா என மாற்றியமைத்தார்கள். இவர்கள் துறவறம் பூண்டவர் போல் எளிய வாழ்க்கைகையைக் கைக்கொண்டார்கள். இவர் ஹிஜ்ரி 50ம் ஆண்டு (சிலர் 56 என்றும் கூறுவர்) தமது 65ம் வயதில் மரணமானார்கள்.

அன்னை உம்முஹபீபா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் இஸ்லாத்தை தழுவியதற்காக துன்பங்களை அனுபவித்தார்கள். ஒரு பெண் இவ்வளவு கஷ்டப்படுவதைக் கேள்வியுற்ற நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தாங்கொணாக் கவலையடைந்து தாங்களே அப்பெண்ணை மணக்க விருப்பம் தெரிவித்தார்கள்.

ஹிஜ்ரி 4ல் திருமணம் நடைபெற்றது. இவர் அபூஸுபியானின் மகள். இவர்கள் நபியவர்கள் மீது மிகவும் பற்றுடையவர். சுமார் 65 ஹதீஸ்கள் மட்டில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். களங்கமில்லாத வெள்ளை மனம் படைத்தவர். இவர்களைத் திருமணம் செய்தமை பகைமையை கட்டுப்படுத்த உதவியாக இருந்தது. ஏனைய ஸுன்னத்தான தொழுகைகளைவிட மேலதிகமாய்த் தினமும் பன்னிரண்டு றக்அத் நபில் தொழுகை தொழுது வந்தார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு வின் வீடு முற்றுகையிடப்பட்டிருந்த சமயம் ஒரு தோல்பையில் தண்ணீர் சுமந்து சென்று அவ்வீட்டாருக்குக் கொடுக்க முயற்சி செய்தார். இவர் ஹிஜ்ரி 44ல் மரணமானார்கள்.

அன்னை ஸபிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை அடுத்து நோக்குவோம். இவரின் பெயர் ஸைனப் என்பதாகும். இவர் கைபர் யுத்தத்தில் சிறைபிடிக்கப்பட்டவர். யுத்தத்தின் போது கிடைக்கும் வஸ்துக்களில் அரசருக்கோ யுத்த தரகருக்கோ வரும் பொருளுக்கு ஸபிய்யா என்று சொல்வது அறபிகளின் வழக்கம். எனவே இவரும் அன்று முதல் ஸபிய்யாவென அழைக்கப்படலானார். ஹிஜ்ரி 7ல் இவர்களை விடுதலை செய்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவரைத் திருமணமும் செய்தார்கள். ஹிஜ்ரி - 35ம் ஆண்டு உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தமது இல்லத்தில் முற்றுகையிடப் பட்டபோது அளவற்ற உதவிபுரிந்தார்கள். பல நாயகவாக்கியங்கள் இவர்களால் வெளிவந்துள்ளன. ஏனைய மனைவியர் போன்று ஞானம் படைத்தவர். இவரின் அடக்கமும்,

பெருந்தன்மையும் யாவராலும் போற்றப்பட்டுகின்றன. இவர்கள் றஸுலுல்லாஹ் அவர்களை அதிகம் நேசித்து வந்தார்கள். இவர்கள் தயாள குணமும், இளகிய மனமும் உடையவர். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்காகப் பரிந்தும் பேசுவார்கள். இவர்கள் ஹிஜ்ரி - 50ம் ஆண்டில் தங்கள் 60ம் வயதில் மரணமானார்கள்.

அன்னை மைமூனா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை றஸுலுல்லாஹ்வே திருமணம் செய்துகொள்ள வேண்டும் என மக்கள் விரும்பினார்கள். அதனால் ஹி - 7ல் 51 வயதான மைமூனா ரழியல்லாஹு அன்ஹாவை மணந்தார்கள். இதுவே றஸுலுல்லாஹ்வின் இறுதி விவாகமாகும். இவர் குறைஷியரான ஹாரித் பின் ஹஸன் எனும் பிரபல தலைவரின் குமாரியாவார். ஆதலால் இதன் மூலம் மக்காவின் செல்வாக்குமிக்க பலர் இஸ்லாத்தின் பக்கம் திரும்பிவிட்டனர். காலிதுப்னு வலீத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் இவர்களில் ஒருவராவர்.

மைமூனா நாயகி 46 நாயகவாக்கியங்களை நானிலத்தோருக்கு எடுத்துரைத் திருக்கிறார்கள். அநேக சந்தர்ப்பங்களில் மார்க்கத்தீர்ப்பும் கூறியிருக்கிறார்கள். நபிகளாரின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் அதிக கவனமாக இருந்தார்கள். அடிமைகளை வாங்கி விடுதலை செய்வது அவருக்கு அதிக விருப்பம். பெண்களைச் சீர்த்திருத்துவதிலும் அவர்களுக்கு உபதேசம் புரிவதிலும் அதிக பிரியமுடை யவராயிருந்தார்கள். இவர்கள் ஹிஜ்ரி - 51ம் ஆண்டில் மரணமானார்கள்.

நபியவர்கள் பெண் விருப்புடையவராக இருந்தால் எத்தனை எத்தனையோ இளம் பேரழகிகளை விவாகம் செய்திருக்க முடியும் ஆனால் இஸ்லாத்தை ஸ்திரப்படுத்திப் பரப்பும் முகமாகவே இவர்கள் இவ்வாறு பல விவாகங்களைச் செய்தார்கள். அந்த அன்னைமாரும் பெருமானாரோடு இணைந்து நின்று இஸ்லாத்தின் நலனுக்காக உழைத்தனர் என்பதையும், பெருமானாரின் இல்லற வாழ்வில் பங்கு கொண்டும், தம் பொருளைச் செலவு செய்தும் யுத்தங்களில் பாடுபட்டும், ஹதீஸ்களை மனனம் செய்தும், மார்க்கத்தீர்ப்பு வழங்கியும் இஸ்லாத்துக்கு அரும்பணியாற்றினார்கள். (பெருந்தொண்டாற்றினார்கள்).

## செயற்பாடு

**சுருக்கமான விடை தருக.**

1. உம்மஹாத்துல் மு∴மினின் என்பதன் பொருள் யாது?
2. உம்மஹாத்துல் மு∴மினின்களின் பெயர்களைத் தருக.
4. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் எந்த மனைவி பின்னல் வேலை செய்து வாழ்க்கையை நடாத்தினார்கள்?
5. ஏழைகளின் தாய், நீண்டகரமுடையவர் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப் பட்டவர்கள் யாவர்?
6. உம்மஹாதுல் மு∴மினின்களின் பெயர்கள், அவர்கள் தொகுத்த ஹதீஸ்கள், சிறப்புப் பெயர்கள், மரணித்த ஆண்டு என்பவற்றை அட்டவணைப்படுத்துக.
7. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மனைவிமார்கள் இஸ்லாத் துக்கு அளித்த பங்களிப்பைச் சுருக்கமாக எழுதுக.
8. தினமும் பன்னிரண்டு றக்அத் நபில் தொழுகையை தொழுது வந்த அன்னையின் பெயர் என்ன?

## 7.4 அஹ்லுல் பைத்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்க்கையை மக்கா மதீனா வாழ்வு என இரு பகுதிகளாகப் பிரித்து முன்னைய பாடங்களில் படித்திருப்பீர்கள். அதே போல நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மனைவிமார் குறித்தும் அறிந்திருப்பீர்கள். இப்பாடத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்பம் பற்றி அறிந்து கொள்வோம்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்பத்தவர்களை இஸ்லாமிய அறிஞர்கள் 'அஹ்லுல் பைத்' என்ற சொற்றொடரின் மூலம் குறிப்பிடுவர். அவர்களில் முக்கியமானவர்களாகப் பின்வருவோரைக் குறிப்பிடலாம்.

1. ஹம்ஸா ரழியல்லாஹு அன்ஹு

இவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சிறிய தந்தையும், பால் குடிச் சகோதரரும் ஆவார். நபியவர்களின் பிறப்பிற்கு இரண்டு வருடங்கள் முன்னர் பிறந்து நபித்துவம் கிடைத்து இரண்டாம் ஆண்டு இஸ்லாத்தை ஏற்றுள்ளார். நபிக்கு இறுதி வரை உதவியாக இருந்ததோடு ஹிஜ்ரத்தும் செய்தார்கள். பத்ர் போரில் கலந்துக்கொண்டு இஸ்லாத்திற்கு எதிராகப் போர் தொடுத்த குறைஷிகளின் பல தலைவர்களை வீழ்த்தினார்கள். ஹிஜ்ரி 3 ல் நடைபெற்ற உஹுதுப் போரின் போது மிகவும் மும்முரமாக ஈடுப்பட்டிருந்த அவர்கள் மறைந்திருந்து தாக்கப்பட்டதால் வீர மரணத்தைத் தழுவினார்கள். நபியவர்கள் ''ஸையிதுஷ் ஷுஹதா.'' இஸ்லாத்திற்காக உயிர் நீர்த்த தியாகிகளின் தலைவர் என்று பெயர் சூட்டினார்கள். இவர்களுக்கு ''உம்மு அமாரா'' என்ற ஒரு மகளும் உள்ளார்.

2. அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிறப்பிற்கு இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு முன் பிறந்தார்கள். ஜாஹிலிய்யாக் காலத்தில் குறைஷித் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார்கள். நபியவர்களுக்கு நுபுப்வத் கிடைத்த ஆரம்ப முதலே அவர்களுக்கு உதவியாக இருந்தார்கள்.

நபியவர்களின் வபாத்திற்குப் பிறகு அபூபக்கர், உமர் உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹும் ஆகியோருக்கு நெருக்கமாக இருந்ததோடு ஹிஜ்ரி 32 ஆம் ஆண்டு மதீனாவில் வபாத்தானார்கள். இவர்களின் புதல்வர்களில் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மிகவும் பிரபல்யமானவர்கள்.

நபியவர்களிடம் இருந்து பல ஹதீஸ்களை அறிவித்ததோடு குர்ஆன் விரிவுரையில் மிகவும் தேர்ச்சி பெற்றவர்களாகவும் இருந்தார். தர்ஜீமானுல் குர்ஆன் என்ற பட்டமும் இவர்களுக்கு கொடுக்கப்பட்டது.

3. அலி ரழியல்லாஹு அன்ஹு

நபித்துவம் கிடைப்பதற்குப் பத்து வருடங்களுக்கு முன் பிறந்தார்கள். முதலில் இஸ்லாத்தை ஏற்றவர்களின் ஒருவர். நபியவர்களின் பராமரிப்பில் வளர்ந்தவர். தபூக் போரைத் தவிர்ந்த ஏனைய எல்லாப் போர்களிலும் பயணங்களிலும் நபியவர்களுடன் இருந்தார்கள். இஸ்லாத்திற்காக மிகவும் வீரத்துடன் செயற்பட்டார்கள். தனது வாழ்வின் எல்லாக் கட்டங்களையும் இஸ்லாத்திற்காக அர்ப்பணித்தார்கள். அவர்களின் சிறப்புகள் பற்றிய ஸஹீஹான பல ஹதீஸ்கள் காணப்படுகின்றன. அத்துடன் அவர்கள் பெயரில் இட்டுக் கட்டப்பட்டு கூறப்பட்ட பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. நபியவர்கள் கைபர் போரின் போது ஓர்

இரவு ஸஹாபாக்களிடம் நான் நாளை முஸ்லீம்களின் கொடியை ஒருவரிடம் கொடுக்கப் போகின்றேன். அவரை அல்லாஹ்வும் அவன் தூதரும் நேசிக்கின்றார்கள். அவர் அல்லாஹ்வையும், அவன் தூதரையும் நேசிக்கிறார். அவருக்கு அல்லாஹ் வெற்றியைக் கொடுப்பான் என்று கூறினார்கள். அதற்கு ஸஹாபாக்கள் எல்லோரும் இப்பாக்கியம் தனக்கு கிடைக்க வேண்டும் என்று ஆசித்தனர். மறுநாள் காலை நபியவர்கள் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களை அழைத்து கொடியை கொடுத்து அனுப்பினார்கள். கோட்டையும் வீழ்ந்தது.

நபியவர்கள் தனது கடைசிமகளார் பாத்திமாக நாயகி அவர்களை ஹிஜ்ரி 2 ஆம் வருடம் திருமணம் முடித்து வைத்தார்கள். நபியின் வபாத்திற்கு பின் வந்த கலீபாக்களுடன் இணைந்து செயற்பட்டார்கள். உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் வபாத்திற்கு பின் இஸ்லாத்தின் நான்காவது கலீபாவாகத் தெரிந்து எடுக்கப்பட்டார்கள். சத்தியத்திற்காக முன்னைய கலீபாக்களைப் போன்று பாடுபட்டு அதே சத்தியத்திற்காக ஹிஜ்ரி 40 ஆம் ஆண்டு ஷஹீதானார்கள். அவர்களுக்கு ஹஸன், ஹீஸைன் ரழியல்லாஹு அன்ஹுமா என்ற இரு ஆண் குழந்தைகளும், ஸைனப் என்ற பெண்குழந்தையும் பாத்திமா மூலம் பிறந்தன.

4. ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு

ஹிஜ்ரி மூன்றாம் ஆண்டு பிறந்தார்கள். நபியவர்களுக்கு மிகவும் அன்புக்குரியவர்களாகத் திகழ்ந்தார்கள். ஒருமுறை இவர்களையும், உஸாமா ரழியல்லாஹு அன்ஹு அவர்களையும் தமது மடியில் உட்கார வைத்துக்கொண்டு யா அல்லாஹ் நான் இவ்விருவரையும் நேசிக்கின்றேன். நீயும் நேசிப்பாயாக! என்று கூறினார்கள். இவர் இஸ்லாத்திற்காக இறுதிவரை தியாகம் செய்தார்கள். தனது தந்தைக்குப் பின்
6 மாதம் வரை கலீபாவாக இருந்த இவர்கள் தனது ஆட்சியை சமாதானத்தை ஏற்படுத்த முஆவியா ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு விட்டுக் கொடுத்தரார்கள். ஒரு முறை நபியவர்கள் எனது இந்த மகன் ஒரு தலைவன் இவரின் மூலம் அல்லாஹ் முஸ்லீம்களின் இரு பிரிவினர்களுக்கு இடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவான் என்றார்கள். இவர் ஹி 47ம் ஆண்டு வபாத்தானார்கள்.

6. ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு)

ஹுஸை (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தனது சகோதரர் ஹஸன் பிறந்து ஒரு வருடத்தில் பிறந்தார்கள். இஸ்லாத்திற்காகத் தனது வாழ்க்கை முழுவதையும் தியாகம் செய்தார்கள். இறுதியில் சத்தியத்திற்காகவே ஹி61ம் ஆண்டு அநியாயக்காரர்களால் கர்பலா என்ற இடத்தில் கொலை செய்யப்பட்டார்கள்.
நபியவர்கள் ஒரு முறை இவர்களையும், ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களையும் காட்டி இவர்கள் இருவரும் இவ்வுலகில் எனக்குக் கிடைத்த மலர்கள் என்றார்கள்.

## செயற்பாடுகள்

சுருக்கமான விடை தருக.

1. ‘அஹ்லுல் பைத்’ எனும் சொற்றொடர் எதனைக் குறிக்கின்றது?
2. ஹஸன் ரழியல்லாஹு அவர்கள் எவ்வளவு காலம் கிலாபத் பொறுப்பில் இருந்தார்கள்?
3. ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஆட்சிப் பொறுப்பை யாரிடம் ஒப்படைத்தார்கள்?
4. ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் எங்கு நடந்த சமரில் கொலை செய்யப்பட்டார்கள்?
5. ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு ஆகியோர் பிறந்த ஹிஜ்ரி ஆண்டைக் குறிப்பிடுக.